| | | |
|---|---|---|
| சாட்சி : PW2<br>ஸ்ரீதர் | அ.வ.எண். 349/2018 | 14.11.2024 |

குறுக்கு விசாரணை

பெரியசாமியின் மனைவி, மகள் பெயர் எனக்கு தெரியாது. பழனிச்சாமி, முத்துவேல் ஆகியோரை தெரியும், அவர்கள் விவசாய குடும்பம். பரமேஸ்வரி யார் என்பதை சாட்சி சொல்ல வரும்வரை தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வழக்கு அட்டவணை சொத்துக்கள் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. புதூர் உத்தமனூர் ஊராட்சி தலைவர் தேர்தலில் சுகுமாருக்கு தேர்தல் பணி எதுவும் செய்யவில்லை. வாதி, முத்துவேல் ஆகியோர் எனக்கு 2000 லிருந்து பழக்கம். வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்க்கவில்லை. வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள எனது சொத்தின் பட்டா எண்.117 ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது சொத்து நஞ்சையா, புஞ்சையா என வகைப்பாடு இல்லாமல் வாக்குமூலம் கொடுத்தமைக்கு சிறப்பு காரணம் இல்லை என்றால் சரிதான். பட்டா எண்.117 ல் எனக்கு சொத்து உள்ளது என்பதை காட்டுவதற்கு கணினி சிட்டா கொடுத்துள்ளேன். நான் கணினி சிட்டா கொடுக்கவில்லை என்றும், சாட்சியத்திற்கு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு குத்தகை பதிவேடு பார்த்துள்ளேன். எப்போது பார்த்தேன் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பு பார்த்தேன். மேற்படி பதிவேட்டில் பசலி எண் 1433 என கண்டுள்ளது. வருவாய் துறையில் மனு போட்டு பார்த்தேனா என்றால் இல்லை, கம்யூட்டர் சென்டரில் பார்த்தேன்.அதில் பட்டா எண்.117 என கண்டுள்ளது.

வழக்கு சொத்திற்கான கணினி பட்டாவையும், குத்தகை பதிவேட்டையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு சொந்த ஊர் குளுமணி என்றால் சரிதான். குளுமணிக்கும், புதூர் உத்தமனூருக்கும் இடையில் 40 கிலோ மீட்டர் இருக்கும். வாதி குத்தகை என்பது சம்மந்தமாக ஆவணம் உள்ளது. மேற்படி ஆவணத்தை பார்த்தால் உண்மை தெரியும். மேற்படி குத்தகை ஆவணம் எப்போது ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. பழனிச்சாமி, முத்துவேல் ஆகியோருக்கு பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கு பத்திரம் உள்ளது. மேற்படி பத்திரத்தை பார்த்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். பழனிச்சாமி, முத்துவேல், பரமேஸ்வரி ஆகியோர் விவசாயிகள் என்றும், அவர்கள் வாதிக்கு நிலங்களை குத்தகைக்கு விடவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பழனிச்சாமிக்கும், முத்துவேலுக்கம் இடையில் எழுத்துமூலமான பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பெண் வாரிசான பரமேஸ்வரிக்கு பாகம் கிடைக்கக்கூடாது என்பதற்காக முத்துவேலும், வாதியும் சேர்ந்து 05.11.2012 ல் போலியான கிரைய ஆவணத்தையும், இந்த போலி வழக்கையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி 05.11.2012 பத்திரம் ஏற்படவில்லை என்றும், வாதி சுவாதீனத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி குளுமணி கிராமத்திலிருந்து வழக்கு சொத்திற்கு வந்து சாகுபடி செய்வது வாய்ப்பில்லை என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.